செ.வெ.எண்.32 நாள்.10.07.2017.

திருநெல்வேலியில் மகளிர் குழுக்களை சார்ந்த ஊக்குநர்களுக்கு ‘‘சமூக சுகாதார அணுகு முறைகள் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி, சாந்திநகர், தேம்பாவணி தோட்ட கூட்ட அரங்கில், ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மகளிர் குழுக்களைச் சார்ந்த ஊக்குநர்களுக்கு ‘‘சமூக சுகாதார அணுகு முறைகள் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சி’’ முகாம் இன்று (10.07.2017) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பயிற்சி வகுப்பை துவக்கி வைத்தார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டம், நூறு சதவீதம் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத மாவட்டமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் நமது மாவட்டத்தில் 1.30 இலட்சம் வீடுகளுக்கு தனிநபர் கழிப்பறைகள் இல்லாத நிலை உள்ளது. இந்த வீடுகள் அனைத்திலும் தனிநபர் இல்ல கழிப்பிடம் அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து இல்லங்களிலும், தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் அனைத்து துறைகளிலும் நல்ல வளர்ச்சியடைந்த மாநிலமாக இருந்த போதிலும் இந்த ஒரு விஷயத்தில் நாம் பின் தங்கியுள்ளோம். தமிழக அரசு தனிநபர் இல்ல கழிப்பறைகள் அமைக்க அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பயிற்சி பெறும் நீங்கள் நமது ஊராட்சியை திறந்தவெளி கழிப்பிடம் இல்லா ஊராட்சியாக மாற்றுவோம் என்ற மாற்றத்தினை கொண்டு வரவேண்டும். இதை பல கட்டங்களாக செய்ய வேண்டும். முதலாவதாக அனைத்து இல்லங்களிலும் கழிப்பறை கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து கழிப்பறைகளை பயன்படுத்தவும், தன் சுத்தம் குறித்தும், பயிற்சி மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் வீடு, வீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி எனது ஊராட்சியை நான் திறந்தவெளி கழிப்பிடமில்லா ஊராட்சியாக மாற்றிக்காட்டுவேன் என சபதம் மேற்கொண்டு பணியாற்றிட வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, பீட்பேக் பவுண்டேசன் சிஇஓ திரு.அஜய் சின்கா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள், மகளிர் குழு ஊக்குநர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.